# சட்டவரைஞர் திணைக்களம்

**2014**

**செயல்நிறைவேற்றுகை அறிக்கை**

## நோக்கு

அரசாங்கத்தின் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதற்கு அரசாங்கத்திற்குத் துணைபுரிவதன் மூலம் நல்லாட்சியை உறுதிப்படுத்துதல்.

## பணி

அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கமாக உருமாற்றுவதில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அத்தகைய சட்டவாக்கத்தின் வரைதல் அரசியலமைப்பிற்கிணங்கச் செய்யப்படுதல்.

## அறிமுகம்

சட்டவரைஞர் திணைக்களம், "A" தரத்திலான அரசாங்கத் திணைக்களமொன்றாகவுள்ளது. 2010.04.30 ஆந் தேதிய 1651/20ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின்படி இத்திணைக்களம் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களின் நேரடி மேற்பார்வையின்கீழ் பணியாற்றுகின்றது.

சட்டவரைஞர் திணைக்களத்தின் முக்கிய பணி, அரசியலமைப்புக்கும் அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட முடிபுகளுக்கும் இணங்கப் பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதலாகும். இந்நடைமுறையில் இத்திணைக்களமானது, புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் சட்டமூலங்களை வரைகின்றதுடன், பல்வேறு அரசாங்க அமைச்சுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் மீளாய்வுசெய்கின்றது. இத்திணைக்களத்துக்குப் பொறுப்பிக்கப்பட்ட ஏனைய கடமைகள், வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனை செய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் சட்டமூலங்கள் விவாதத்துக்கு எடுக்கப்படும்போது பாராளுமன்றத்தில் சமூகமாயிருப்பதனையும் பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைந்து செயற்படுவதனையும் உள்ளடக்கும். அமைச்சுக்களின் கீழ் அடங்குகின்ற அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச்சட்டமுறையான குழுக்களும் உட்பட, இத்திணைக்களம் எல்லா அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சேவைகளை வழங்குகின்றது. பல்வேறு சட்டமூலங்களையும் துணைநிலைச் சட்டவாக்கங்களையும் தயாரித்தல் தொடர்பாக இத்திணைக்களமானது அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

### 1. சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பாகச் சட்டவரைஞர் திணைக்களத்தின் பணிகள்:

(1) புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் என மும்மொழிகளிலும் சட்டமூலங்களை வரைதல்.

(2) துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்தலும் மற்றும் அவசியமானவிடத்து, அவற்றை மும்மொழிகளிலும் வரைதலும்.

(3) சட்டமூலங்கள் தொடர்பாகச் சட்ட மதியுரையை வழங்குதல்.

(4) சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.

(5) மாகாண சபை நியதிச்சட்டங்களை வரைதல்.

(6) தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை (கூட்டிணைத்தல்களின் வரைவுச் சட்டமூலங்கள்) மும்மொழிகளிலும் மீளாய்தல்.

(7) இயைபான துறைசார் அமைச்சுக்களின் ஒத்துழைப்புடனும் அங்கீகாரத்துடனும் சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பான அரசாங்கக் கொள்கைகளைத் தோதானவாறு மீளவமைத்து செயல்முறைக்குகந்தவாறும் வெற்றிகரமாகவும் அத்தகைய கொள்கைகளை அமுலாக்குவதனை இயலச்செய்தல்.

இத்திணைக்களத்தின் தனித்துவமான சிறப்புக்கூறு என்னவெனில், இத்திணைக்களம் அதன் சொந்தக் கட்டமைக்கப்பட்ட வேலை நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டிருப்பதில்லை என்பதாகும். இதற்கான காரணம், திணைக்களத்தின் வேலை நிகழ்ச்சித்திட்டம், தேவைப்பட்ட கொள்கை அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டதன் மேல், கொடுக்கப்பட்டவொரு நேரத்தில், அரசாங்க அமைச்சுக்களினதும், அத்தகைய அமைச்சுக்களின் கீழுள்ள பல்வேறு திணைக்களங்களினதும் சட்டமாக்கல் தேவைகளின் மீது அவசியமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளமையாகும். ஆதலால், சட்டவரைஞர் திணைக்களத்தின் செயல்நிறைவேற்றுகைப் பதிவு, ஏதேனும் குறிப்பிட்ட ஆண்டுபூராகவும் முறையான துறைசார் அமைச்சுக்களினால் அதற்குச் சமர்ப்பிக்கப்பட்ட முதனிலை மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களை, அத்துடன் துணைநிலைச் சட்டவாக்கங்களுக்காகச் செய்யப்பட்ட வேண்டுகோள்களை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் அடிப்படையின் மீது மற்றும் அவற்றை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதன் மீது கட்டமைக்கப்பட்டுள்ளது. இத்திணைக்களத்தின் பிரதான பணியாகவுள்ள சட்டவாக்கங்களை வரைதலின் நோக்கெல்லையினுள் அடங்குகின்ற ஏதேனும் வடிவத்திலான சட்டவாக்கம் (ஒன்றில் முதனிலை, திருத்த அல்லது துணைநிலை) வேண்டுகோள் விடுக்கும் அமைச்சுக்கு அல்லது திணைக்களத்துக்கு அது அனுப்பப்படுவதற்கு முன்னர் மூன்றுமொழிகளிலும் பூர்த்திசெய்யப்பட வேண்டும்.

## 2. பணியாட்டொகுதியினர்

இத்திணைக்களத்தின் பணியாட்டொகுதியினர் அமைப்பு கீழே காட்டப்பட்டுள்ளது. அங்கீகரிக்கப்பட்ட மொத்த ஊழியர்கோப்பு 151 ஆகும்; ஆயினும், 2014ஆம் ஆண்டில் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஊழியர்கோப்பு 86 ஆகவிருந்தது.

| தொழிலின் வகுதி | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் கோப்பு | தொழிலில் இருந்த ஊழியர் கோப்பு |
|---|---|---|
| சிரேட்ட மட்டம் | 37 | 27 |
| மூன்றாம்நிலை மட்டம் | 28 | 03 |
| இரண்டாம்நிலை மட்டம் | 62 | 36 |
| முதனிலை மட்டம் | 24 | 20 |

## 2014.12.31 அன்றுள்ளவாறு சட்டவரைஞர் திணைக்களத்தின் ஊழியர் கோப்பு

| சிரேட்ட மட்டம் | | | மூன்றாம்நிலை மட்டம் | | | இரண்டாம்நிலை மட்டம் | | | முதனிலை மட்டம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது | | அங்கீகரிக் கப்பட்டது | உள்ளபடி யானது |
| சட்டவரைஞர் | 01 | 01 | நிருவாக அலுவலர் | 01 | - | வரவு செலவுத் திட்ட உதவியாளர் | 01 | 01 | சாரதி | 10 | 06 |
| மேலதிகச் சட்டவரைஞர் | 01 | 01 | பிரதான மொழி பெயர்ப்பாளர் | 02 | 02 | கணக்கு உதவியாளர் | 01 | - | கே.கே .எஸ் (KKS) | 14 | 14 |
| பிரதிச் சட்டவரைஞர் | 05 | 05 | மொழி பெயர்ப்பாளர் | 24 | 01 | நூலகப் பொறுப்பாளர் | 01 | 01 | | | |
| சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் | 08 | 03 | தகவல் மற்றும் தொடர்பு தொழினுட்பவியல் அலுவலர் | 01 | _ | முகாமை உதவியாளர் | 28* | 21 | | | |
| உதவிச் சட்டவரைஞர் | 20 | 15 | | | | ஆவணப் படுத்துகை உதவியாளர் | 20 | 10 | | | |
| பிரதான கணக்காளர் | 01 | 01 | | | | பதிப்பாசிரியர் | 11 | 03 | | | |
| பிரதிப் பணிப்பாளர்/ உதவிப் பணிப்பாளர் | 01 | 01 | | | | | | | | | |
| கூட்டுமொத்தம் | 37 | 27 | | 28 | 03 | | 62 | 36 | | 24 | 20 |
| மொத்தம் | | | | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை 151 | | | உள்ளபடியான எண்ணிக்கை 86 | | | | |

* 28 முகாமை உதவியாளர்களைக் கொண்ட ஊழியர் கோப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது. 20 ஆவணப்படுத்துகை உதவியாளர்களை ஆட்சேர்ப்பதற்கான அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது; எவ்வாறாயினும், 10 ஆவணப்படுத்துகை உதவியாளர்கள் மட்டுமே ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

**<u>இத்திணைக்களத்திலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு எடுக்கப்பட்ட வழிமுறைகள்</u>**

இத்திணைக்களத்தின் முழு வேலைப்பளுவையும் நிறைவேற்றுவதற்கு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கோப்பு 151 ஆகும். எவ்வாறாயினும், 2014 ஆம் ஆண்டில் இத்திணைக்களம், மேற்குறிப்பிடப்பட்ட பணியைப் புரிவதில் அதற்கு உதவுவதற்கு 86 நிரந்தர ஊழியர்களை மட்டுமே கொண்டிருந்தது. கீழே காட்டப்பட்டுள்ளவாறு தொழிலின் பல்வேறு மட்டங்களில் நிரப்பப்படுவதற்கு 65 வெற்றிடங்கள் உள்ளன:-

**சிரேட்ட மட்டம்**

(அ) சிரேட்ட மட்டத்தில், சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் பதவியில் ஐந்து வெற்றிடங்கள் உள்ளன. அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறைக்கு இசைந்தொழுக சொல்லப்பட்ட பதவிக்குத் தகைமை கொண்டுள்ள உதவிச் சட்டவரைஞர்கள் எவரும் இல்லாமையினால், அத்தகைய வெற்றிடங்களைத் தற்போது நிரப்பமுடியாது.

(ஆ) உதவிச் சட்டவரைஞர் பதவியில் 5 வெற்றிடங்கள் உள்ளன. அவசியமான ஆட்சேர்ப்புகளைச் செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

**மூன்றாம்நிலை மட்டம்**

(அ) நிருவாக அலுவலர் பதவியில் வெற்றிடம் ஏற்பட்டுள்ளது. இவ்வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்கால ஆட்சேர்ப்புக்களின்போது அலுவலரொருவரை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றனவென அறிவிக்கப்பட்டுமுள்ளது.

(ஆ) மொழிபெயர்ப்பாளர் பதவியில் 23 வெற்றிடங்கள் உள்ளன. அத்தகைய வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

(இ) தகவல் மற்றும் தொடர்புத் தொழினுட்பவியல் அலுவலர் பதவியில் வெற்றிடமொன்றுள்ளது. இவ்வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் தற்போது அலுவலரெவரும் கிடைக்கக்கூடியவராக இராதிருப்பதனால், இடமாற்றங்களுக்கான வேண்டுகோளைச் செய்யும்போது அல்லது எதிர்கால ஆட்சேர்ப்புக்களைச் செய்யும்போது அலுவலரொருவரை

வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமென அறிவிக்கப்பட்டுமுள்ளது.

**இரண்டாம்நிலை மட்டம்**

(அ) கணக்கு உதவியாளர் பதவியில் வெற்றிடமொன்றுள்ளது. இவ்வெற்றிடம் பற்றி இணைந்த சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொருத்தமான அலுவலரொருவர் கிடைக்கக்கூடியவராக வரும்போது இடமாற்றத்தின் மீது அனுப்பப்படுவாரெரன அறிவிக்கப்பட்டுமுள்ளது.

(ஆ) இயைபான காலப்பகுதியின் போதிருந்த அவசியத்துக்கேற்ப ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவிக்குப் பத்து அலுவலர்களையும் பதிப்பாசிரியர் பதவிக்கு மூன்று அலுவலர்களையும் ஆட்சேர்ப்பதற்கான வழிமுறைகள் எடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், தற்போது ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவியில் 13 வெற்றிடங்களும் பதிப்பாசிரியர் பதவியில் 8 வெற்றிடங்களும் உள்ளன.

**முதனிலை மட்டம்**

2014 ஆம் ஆண்டின் முடிவில் சாரதிகளின் ஊழியர்கள் கோப்பிலிருந்த வெற்றிடங்களின் எண்ணிக்கை நான்காக (4) இருந்தது.

**3. இத்திணைக்களத்தின் பிரிவுகள்**

இத்திணைக்களமானது அதற்குக் குறித்தளிக்கப்பட்ட பணிகளைப் புரிவதற்குப் பின்வரும் பிரிவுகளைக் கொண்டிருக்கின்றது.

சட்ட வரைதற் பிரிவு.

தாபன மற்றும் நிருவாகப் பிரிவு.

மொழிபெயர்ப்புப் பிரிவு.

வெளியீட்டுப் பிரிவு.

கணக்குப் பிரிவு.

## சட்டவரைதற் பிரிவு

இப்பிரிவின் முக்கிய பணிகள் பின்வருமாறாகும்:-

- அரசாங்கக் கொள்கைகளைச் சட்டவாக்கங்களாக உருமாற்றுதல்.
- புதிய சட்டவாக்கங்களை ஆக்குவதற்கும் மற்றும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துவதற்கும் எனச் சட்டமூலங்களை மும்மொழிகளிலும் வரைதல்.
- சட்டமூலங்கள் தொடர்பாக அரசாங்க அமைச்சுக்களுக்கும் திணைக்களங்களுக்கும் சட்ட மதியுரை வழங்குதல்.
- சட்டவாக்கங்களை நிறைவேற்றுதலுடன் சம்பந்தப்பட்ட பாராளுமன்றக் கடமைகளைப் புரிதல்.
- மாகாணசபைகளுக்கான நியதிச்சட்டங்களை வரைதல்.

**2014 ஆம் ஆண்டு தொடர்பான வரைவுச் சட்டமூலங்கள் பற்றிய விபரங்கள்**

| | வரைதல் (ஆண்டின் தொடக்கத்தில்) | ஆண்டின் போது திறத்தவர்களிட மிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்கள் | ஏலவேயுள்ள சட்டங்களுக்கான புதிய விண்ணப்பங்கள் | மொத்தம் | தயாரிக்கப்பட்டு இயைபான திறத்தவர்களுக்குக் கையளிக்கப்பட்ட சட்டமூலங்களின் எண்ணிக்கை | மூடிவிடப்பட்ட கோப்புகள் | இணைந்த கோப்புகள் | வரைதல் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|
| புதிய சட்டமூலங்களையும் மற்றும் திருத்தச் சட்டவாக்கங்களையும் வரைதல் | 154 | 39 | 5 | 198 | 35 | 1 | - | 162 |
| பாராளுமன்ற உறுப்பினர்களின் தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் | 95 | 22 | 15 | 132 | 50 | - | - | 82 |
| மாகாணசபை நியதிச்சட்டங்கள் | 20 | - | - | 20 | 1 | - | - | 19 |
| துணைநிலைச் சட்டவாக்கங்கள் (கட்டளைகள், விதிகள், ஒழுங்குவிதிகள் முதலியன) | 101 | 22 | 100 | 223 | 99 | - | - | 124 |

## 2014 ஆம் ஆண்டில் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட சட்டமூலங்கள்

| தொடர் இல. | சட்டத்தின் பெயர் | | |
|---|---|---|---|
| 01 | 2014 இன் 1ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 34/2012 | இலங்கைக் கொள்கைக் கற்கைகள் நிறுவகம் (திருத்தம்) |
| 02 | 2014 இன் 2ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 36/2012 | தேசிய தொழில்துறை முகாமைப்பயிற்சி நிறுவகம் (திருத்தம்) |
| 03 | 2014 இன் 3ஆம் இலக்கச் சட்டம் | சவலூ கூட். 12/2011 | இலங்கைப் புவிச்சரிதவியல் நிறுவகம் (கூட்டிணைத்தல்) |
| 04 | 2014 இன் 4ஆம் இலக்கச் சட்டம் | சவலூ கூட். 11/2012 | பிலிப் குணவர்த்தன ஞாபகார்த்த சங்கம் (கூட்டிணைத்தல்) |
| 05 | 2014 இன் 5ஆம் இலக்கச் சட்டம் | சவலூ கூட். 3/2012 | சந்திம வீரக்கொடி மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 06 | 2014 இன் 6ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 81/2006(II) | மருத்துவம் (திருத்தம்) |
| 07 | 2014 இன் 7ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 04/2014 | சேர்பெறுமதிவரி (திருத்தம்) |
| 08 | 2014 இன் 8ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 05/2014 | உண்ணாட்டரசிறை (திருத்தம்) |
| 09 | 2014 இன் 9ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 07/2014 | பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) |
| 10 | 2014 இன் 10ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 06/2014 | நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) |
| 11 | 2014 இன் 11ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 08/2014 | தொலைத்தொடர்பு அறவீடு (திருத்தம்) |
| 12 | 2014 இன் 12ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 10/2014 | விசேட வியாபாரப் பண்ட அறவீடு (திருத்தம்) |
| 13 | 2014 இன் 13ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 11/2014 | கம்பெனிகள் (திருத்தம்) |
| 14 | 2014 இன் 14ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 12/2014 | தவணைதவறிய வரிகள் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) |
| 15 | 2014 இன் 15ஆம் இலக்கச் சட்டம் | சவலூ 13/2014 | பணச் சட்டம் (திருத்தம்) |
| 16 | 2014 இன் 16ஆம் இலக்கச் சட்டம் | சவலூ கூட். 18/2012 | சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) |

| | | | |
|---|---|---|---|
| 17 | 2014 இன் 17ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 15/2010 | பௌத்த விகாரைகள் மறுசீரமைத்தல் மன்றம் |
| 18 | 2014 இன் 18ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 40/2011 | தேசிய தொழில்முயற்சி அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தம்) |
| 19 | 2014 இன் 19ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 22/2010 | குமாரசிறி ஹெட்டிகே மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 20 | 2014 இன் 20ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 13/2013 | மொஹான் லால் கிரேரு மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 21 | 2014 இன் 21ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 31/2012 | விக்டர் அன்தனீ கல்வி, சமூக, பொருளாதார சேவைகள், அறக்கட்டளை மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 22 | 2014 இன் 22ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 30/2010 | தம்பே, மீகொட, போதிவர்தனராம, ஸ்ரீ மதுரசாம பிரிவென் விஹாரஸ்த சங்வர்தன சபை (கூட்டிணைத்தல்) |
| 23 | 2014 இன் 23ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 23/2012 | நிமல் சிறிபால த சில்வா மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 24 | 2014 இன் 24ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 01/2013 | லக்ஷ்மன் வசந்த பெரேரா சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 25 | 2014 இன் 25ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 50/2011 | இலங்கை அடிப்படைக் கற்கைகளுக்கான நிறுவகம் (திருத்தம்) |
| 26 | 2014 இன் 26ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 28/2013 | காலவிதிப்பு (திருத்தம்) |
| 27 | 2014 இன் 27ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 28/2010 | ஜோன் செனவிரத்ன மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 28 | 2014 இன் 28ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 35/2011 | போதிராஜாராம கல்வி மற்றும் கலாச்சார மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 29 | 2014 இன் 29ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 24/2012 | வசந்த சேனாநாயக்க மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 30 | 2014 இன் 30ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 18/2013 | இலங்கை றோமன் கத்தோலிக்க அதிமேற்றிராணியார், மேற்றிராணிமார் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) |
| 31 | 2014 இன் 31ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 31/2011 | இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் |
| 32 | 2014 இன் 32ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 36/2012 | பியசேன கமகே மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 33 | 2014 இன் 33ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 59/2005 | நிர்மாணத் தொழில் அபிவிருத்தி |
| 34 | 2014 இன் 34ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 03/2014 | மாநகரசபைகள் (திருத்தம்) |

| | | | |
|---|---|---|---|
| 35 | 2014 இன் 35ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 03/2014 | நகரசபைகள் (திருத்தம்) |
| 36 | 2014 இன் 36ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 03/2014 | பிரதேசசபைகள் (திருத்தம்) |
| 37 | 2014 இன் 37ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 03/2014 | உள்ளூர் அதிகாரசபைகள் வெற்றிடங்களை நிரப்புதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தம்) |
| 38 | 2014 இன் 38ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 23/2013 | காணி (பராதீனப்படுத்தப்படுதல் மீதான மட்டுப்பாடுகள்) |
| 39 | 2014 இன் 39ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 25/2014 | இ.அ.நி.கூ.வங்கி (நீக்கல் மற்றும் விளைவாந்தன்மையினவான ஏற்பாடுகள்) |
| 40 | 2014 இன் 40ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 39/2011 | இலங்கை அணுச்சக்தி அதிகாரசபை |
| 41 | 2014 இன் 41ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 33/2014 | ஒதுக்கீட்டுச் சட்டம் |
| 42 | 2014 இன் 42ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 23/2012 | கல்பவுருக்ஷ அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 43 | 2014 இன் 43ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 33/2013 | ஸிவ்முனிஸே வெஹெர பௌத்த மன்றம் (கூட்டிணைத்தல்) |
| 44 | 2014 இன் 44ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 11/2013 | பி.ஹரிசன் சமுதாய அபிவிருத்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் |
| 45 | 2014 இன் 45ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 19/2013 | சித்தசுவாதீனம் குறைந்த பிள்ளைகளுக்கான பாடசாலையின் நலன்புரிச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் |
| 46 | 2014 இன் 46ஆம் இலக்கச் சட்டம் | சவஓ கூட். 34/2011 | உயர்தொழில்சார் சமூக வேலையாட்களின் இலங்கைச் சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் |
| 47 | 2014 இன் 47ஆம் இலக்கச் சட்டம் | சவஓ 34/2014 | ஒதுக்கீட்டுச் சட்டம் |

குறிப்பு:

- ‘‘ச.வ.ஓ.’’ என்பது, புதிய சட்டவாக்கங்களுக்கான வரைவுச் சட்டமூலங்களும் ஏலவேயுள்ள சட்டவாக்கங்களுக்கான திருத்தங்களும் தொடர்பான கோப்புகளைக் குறிப்பீடு செய்கின்றது;
- ‘‘ச.வ.ஓ. கூட்.’’ என்பது, கூட்டிணைத்தல்களுக்கான வரைவுச் சட்டமூலங்கள் தொடர்பான கோப்புகளைக் குறிப்பீடு செய்கின்றது.

## தாபன மற்றும் நிருவாகப் பிரிவு

இப்பிரிவு, பணியாட்டொகுதியினரின் ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் பயிற்சி, திறமைத் தடைகாண் பரீட்சைகளை நடாத்துதல், ஒழுக்காற்றுக் கருமங்கள் மற்றும் போக்குவரத்துத் தொடர்பான கருமங்கள் அத்துடன் இத்திணைக்களத்திலுள்ள மற்றெல்லா நிறுவனஞ்சார், நிருவாகக் கருமங்கள் என்பவற்றைக் கையாளுகின்றது.

(1) **ஆட்சேர்ப்பு, பதவியுயர்வு மற்றும் ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு:**

i. ஆவணப்படுத்துகை உதவியாளர் பதவியிலிருந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு 10 அலுவலர்கள் ஆட்சேர்க்கப்பட்டனர்.

ii. பதிப்பாசிரியர் பதவிக்கான 3 அலுவலர்களை ஆட்சேர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் அவர்களிலிருந்து இரு அலுவலர்கள் 2014.12.31 அன்று வேலைக்கு வந்தனர்.

iii. அலுவலக உதவியாளர் ஊழியர்கோப்பிலிருந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான ஊழியர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

iv. அவருக்கெதிரான சார்த்துரைகள் இருந்த சட்ட அலுவலர் அத்தகைய சார்த்துரைகளுக்குக் குற்றவாளியாகக் காணப்பட்டு சேவையிலிருந்து அகற்றப்பட்டார்.

(2) **பயிற்சி:**

**உள்நாட்டுப் பயிற்சி.**

அலுவலர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சி பின்வருமாறாகும்:

i. இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்

| | |
|---|---|
| சட்ட அலுவலர்கள் | - 05 |
| முகாமை உதவியாளர்கள் சேவை | - 02 |

ii. <u>தேர்ச்சிகள் அபிவிருத்தி மன்றம்</u>

| | |
|---|---|
| சட்ட அலுவலர்கள் | - 09 |
| முகாமை உதவியாளர்கள் சேவை | - 04 |
| சாரதிகள் | - 04 |
| கே. கே. எஸ். (K.K.S.) | - 01 |

iii. <u>தேசியத் தொழிற்கல்வி நிறுவகம்</u>

| | |
|---|---|
| கே. கே. எஸ். (K.K.S.) | - 01 |

iv. <u>நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம்</u>

| | |
|---|---|
| சாரதிகள் | - 02 |

மேற்குறிப்பிடப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுடன் மேலதிகமாக, திணைக்களத்தின் சட்ட அலுவலர்கள் மேலும் இரண்டு உள்நாட்டுச் செயலமர்வுகளில் பங்குபற்றினர். மேலும், சட்ட அலுவலர்களின் நன்மைக்காகத் திணைக்கள வளவுகளில் மூன்றுநாள் “அறிமுகப்படுத்தல் தேர்ச்சிச் செயலமர்வு” நடாத்தப்பட்டது.

அத்துடன் 5 சட்ட அலுவலர்களுக்கு, இத்திணைக்களத்தில் தமது வேலையை மிக்க பயனுள்ள வகையில் புரிவதற்கு அவர்களை இயலச்செய்வதற்கென, சட்டத்திலான பட்டப்பின் கற்கைநெறியைப் பின்பற்றுவதற்கான ஏற்பாடுகளைக் கிடைக்கக்கூடியனவாக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**வெளிநாட்டுப் பயிற்சி**

i. சட்டவரைஞர், தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய சட்ட மாநாடு-2014, மற்றும் இத்தாலியில் நடைபெற்ற 75 ஆவது அகதிச் சட்டக் கற்கைநெறி என்பவற்றில் பங்குபற்றினார்.

ii. மேலதிகச் சட்டவரைஞர், ஐக்கிய இராச்சியத்தில் நடைபெற்ற சட்டவாக்க வரைதற் கற்கைநெறி - 2014 என்பதில் பங்குபற்றினார்.

iii. பிரதிச் சட்டவரைஞரொருவர், ஐ.அ. நாடுகளிலுள்ள சர்வதேசச் சட்டவாக்க வரைதல் நிறுவகத்தினால் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டமொன்றில் பங்குபற்றினார் என்பதுடன் சிரேட்ட உதவிச் சட்டவரைஞரொருவர், தகவல் தொழினுட்பவியல் சட்டத்தை

வலுவுக்கிடுதல் தொடர்பாக இந்தியாவில் நடாத்தப்பட்ட செயலமர்வொன்றிலும் பங்குபற்றினார்.

iv. இரு பிரதிச் சட்டவரைஞர்கள், தாய்லாந்தில் நடைபெற்ற ஆசிய சட்ட மாநாடு-2014 பங்குபற்றியதுடன் பிரதிச் சட்டவரைஞரொருவர் நேபாளத்தில் நடைபெற்ற சர்வதேச மனிதாபிமானச் சட்டம் பற்றிய 25 ஆவது தெற்காசியக் கற்பித்தல் அமர்வுக்கு அனுப்பப்பட்டார்.

## <u>சட்டவரைஞர் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டு மாநாடுகள் - 2014</u>

| | மாநாட்டின் பெயரும் நாடும் | பங்குபற்றிய அலுவலரின் பெயர் |
|---|---|---|
| 1. | லோ ஏசியா மாநாடு 2014 – தாய்லாந்து | திரு. ஜீ. எஸ். ஏ. டி சில்வா<br>சட்டவரைஞர்<br><br>திருமதி ரீ.ஏ.வை.எம். ரணவண<br>பிரதிச் சட்டவரைஞர்<br><br>செல்வி டீ.டீ குலசேன<br>பிரதிச் சட்டவரைஞர் |

## <u>சட்டவரைஞர் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுச் செயலமர்வுகள் - 2014</u>

| | **செயலமர்வின் பெயரும் நாடும்** | **பங்குபற்றிய அலுவலரின் பெயர்** |
|---|---|---|
| 1. | 75 ஆவது அகதிச் சட்டக் கற்கைநெறி – இத்தாலி | திரு. ஜீ. எஸ். ஏ. டி சில்வா<br>சட்டவரைஞர் |
| 2. | சர்வதேச மனிதாபிமானச் சட்டம் பற்றிய 25 ஆவது தெற்காசியக் கற்பித்தல் அமர்வு (SATS) – நேபாளம் | திருமதி கே.ஆர்.வை. ஹப்புஆராச்சி<br>பிரதிச் சட்டவரைஞர் |

## சட்டவரைஞர் திணைக்களத்தின் பதவிநிலை அலுவலர்கள் பங்குபற்றிய வெளிநாட்டுப் பயிற்சி நெறிகள் - 2014

| | பயிற்சி நெறியின் பெயரும் நாடும் | பங்குபற்றிய அலுவலரின் பெயர் |
|---|---|---|
| 1. | 2014 – சட்டவாக்க வரைதற் கற்கைநெறி – ஐக்கிய இராச்சியம் | திருமதி. டீ.எஸ்.எச். குமாரஜீவ, மேலதிகச் சட்டவரைஞர் |
| 2. | 2014 – சர்வதேச சட்டவாக்க வரைதல் நிறுவகம் – ஐக்கிய அமெரிக்க நாடுகள் | திருமதி எஸ்.ஏ. தில்ருக்ஷி, பிரதிச் சட்டவரைஞர் |
| 3. | தகவல் தொழினுட்ப (IT) சட்ட வலுவுக்கிடுகை – இந்தியா | திருமதி. டீ. டீ. வீரக்கொடி, சிரேட்ட உதவிச் சட்டவரைஞர் |

### (3) ஏனைய நிறுவனஞ்சார் மற்றும் நிருவாகச் செயற்பாடுகள்

i. உள்நாட்டு ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் சட்டத்துறையில் நடைமுறையிலுள்ள அபிவிருத்திபற்றி அலுவலர்களைப் பரிச்சயமுள்ளவர்களாக வைத்திருக்கும் நோக்குடனும், அது தொடர்பாக அவர்களின் தேர்ச்சிகளை அபிவிருத்தி செய்வதற்கும் இத்திணைக்களம் I ஆம் தர நூலகமொன்றைத் தாபித்துள்ளது. மொத்தத்தில் 11 உள்நாட்டு, வெளிநாட்டுச் சட்டப் புத்தகங்கள் 2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.

ii. இத்திணைக்கள ஊழியர்களின் நன்மைக்காக திணைக்களத்தில் சேமநலச் சங்கமொன்றுள்ளது. 2014 ஆம் ஆண்டில், பணியாட்டொகுதியினருக்கிடையே சகோதரத்துவத்தை மேம்படுத்துவதற்கான உல்லாசப்பயணங்களையும், அவர்களின் ஆன்மீக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட மத நிகழ்ச்சித் திட்டங்களையும் சங்கமானது ஒழுங்குபடுத்தியது. சங்கத்தின் உறுப்பினர்களுக்கு, அவர்களின் நிதித் தேவைகளில் உதவுவதற்கென, கடன்வசதிகளும் வழங்கப்பட்டன.

iii. சட்ட அலுவலர்களின் சேமநலத்துக்காகச் சட்ட அலுவலர்கள் கழகமொன்று தாபிக்கப்பட்டுள்ளது. அலுவலர்களின் ஏனைய சேமநலத் தேவைகளைக் கவனிக்கும் அதேவேளையில், அலுவலர்களின் உயர்தொழில்சார் தேர்ச்சிகளின் அபிவிருத்திக்காக இக்கழகம் வழிவகுக்கின்றது.

iv. இத்திணைக்களத்தினுள்ளான எல்லாக் கணினிகளும் ஒரு வலையமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளதுடன் எல்லாப் பதவிநிலை அலுவலர்களுக்கும் ஏனைய தகவுடைய அலுவலர்களுக்கும் கணினிகளும் இணைய வசதியும் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய அலுவலர்களுக்கும் கணினிகளுக்கும் இணைய வசதிக்குமான அணுக்கம் வழங்கப்பட்டுள்ளது. புதிய தொழினுட்பவியலைப் பயன்படுத்துவதற்கு எல்லா அலுவலர்களுக்கும் வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் இத்திணைக்களம் e-ஆளுகைக் கொள்கையை அமுலாக்கியுள்ளது.

## மொழிபெயர்ப்புப் பிரிவு

மொழிபெயர்ப்புப் பிரிவானது, (புதிய சட்டவாக்கங்களினதும் திருத்தச் சட்டவாக்கங்களினதும்) எல்லா வரைவுச் சட்டமூலங்களையும் மற்றும் சட்ட வரைதற் பிரிவினால் ஆங்கிலத்தில் மீளாய்வு செய்யப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களையும் இயைபான மொழிகளில் மொழிபெயர்ப்பதற்குப் பொறுப்பாகவுள்ளது. தாபன, நிருவாக மற்றும் கணக்குப் பிரிவுகளினால் அனுப்பப்பட்ட அலுவலகமுறையான ஆவணங்களைத் தேவைப்பட்ட மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

## வெளியீட்டுப் பிரிவு

வரைவுச் சட்டமூலங்களினதும் துணைநிலைச் சட்டவாக்கங்களினதும் ஆங்கில, சிங்கள, தமிழ் உரைகளை ஒப்புநோக்குவதற்கும் சரிபார்ப்பதற்கும், அரசாங்க அச்சகரினாலும் பாராளுமன்றத்தினாலும் அனுப்பிவைக்கப்பட்ட இயைபான ஒப்புநோக்கற் பிரதிகளையும் தாய்ப் பிரதிகளையும் வரைவுகளின் கையெழுத்துப் பிரதிகளுடன் வாசிப்பதற்கும் வெளியீட்டுப் பிரிவு பொறுப்பாகவுள்ளது. சட்ட அலுவலர்களின் மேற்பார்வையின் கீழ் அத்தகைய ஒப்புநோக்கற் பிரதிகள் பதிப்பிக்கப்படுமிடத்து அரசாங்க அச்சகருடனும் பாராளுமன்றத்துடனும் ஒருங்கிணைவதற்கும் அரசாங்க வர்த்தமானியில் சட்டமூலங்கள் வெளியிடப்படுதல் தொடர்பான கருமங்களைப் புரிவதற்கும் இப்பிரிவு பொறுப்பாகவுள்ளது.

# கணக்குப் பிரிவு

## 015 சட்டவரைஞர் திணைக்களம்

## 2014.01.01 – 2014.12.31 என்ற காலப்பகுதிக்கான செலவினம்

தலைப்பு : 015 – சட்டவரைஞர்

நிகழ்ச்சித்திட்டம் : 01 தொழிற்பாட்டுச் செயற்பாடுகள்

கருத்திட்டம் : 01 பொது நிருவாகமும் சட்டவாக்கங்களை வரைதலும்

(அ) 2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான மீண்டுவருஞ் செலவினம்

| மீண்டுவருஞ் செலவினத்தின் விபரங்கள் | வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடு (ரூபா) | தேறிய நிதி ஏற்பாடு (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| ஆளுக்குரிய வேதனாதிகள் | 41,000,000 | 41,000,000 | 39,871,636 |
| ஏனைய செலவினம் | 28,845,000 | 28,845,000 | 28,107,404 |
| மொத்த மீண்டுவருஞ் செலவினம் | **69,845,000** | **69,845,000** | **67,979,040** |

2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான மூலதனச் செலவினம்

| மூலதனச் செலவினத்தின் விபரங்கள் | வரவுசெலவுத் திட்ட நிதி ஏற்பாடு (ரூபா) | தேறிய நிதி ஏற்பாடு (ரூபா) | மொத்தச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| **மூலதனச் சொத்துக்களை மறுசீரமைத்தலும் சீராக்குதலும்**<br><br>2001 – கட்டடமும் நிர்மாணங்களும் | 500,000 | 500,000 | 214,027 |
| **மூலதனச் சொத்துக்களைக் கொள்ளுதல்**<br><br>2102 – தளபாடமும் அலுவலகச் சாதனங்களும் | 1,000,000 | 1,000,000 | 964,241 |
| **மனிதவள அபிவிருத்தி**<br><br>2401 - அலுவலகப் பணியாட்டொகுதி யினருக்குப் பயிற்சியளித்தல் (அ) | 7,800,000 | 7,800,000 | 5,835,886 |

| | | | |
|---|---|---|---|
| **<u>ஏனைய மூலதனச் செலவினம்</u>**<br><br>2502 - முதலீடுகள் - சட்டப் புத்தகங்களைக் கொள்வனவு செய்தல் | 1,000,000 | 1,000,000 | 184,891 |
| **<u>இலங்கைச் சட்டவாக்கங்களை மீளாய்தல்</u>**<br><br>2502 – முதலீடு | 32,175,000 | 32,175,000 | 659,934 |
| **மொத்த மூலதனச் செலவினம்** | **42,475,000** | **42,475,000** | **7,858,979** |

(ஆ) 2014.01.01 முதல் 2014.12.31 வரையிலான வருவாய்க் கணக்கு

| **விவரணம்** | **மதிப்பிடப்பட்ட வருவாய் (ரூபா)** | **வருவாய் (ரூபா)** |
|---|---|---|
| வட்டி - ஏனையவை | 400,000 | 496,884 |

(இ) முற்பணக் கணக்கு – 015011

(2014.01.01 – 2014.12.31)

| | **செலவினத்தின் ஆகக்கூடிய வரையறை (ரூபா)** | **பெறுகைகளின் ஆகக்குறைந்த வரையறை (ரூபா)** | **பற்றுமீதியின் ஆகக்கூடிய வரையறை (ரூபா)** |
|---|---|---|---|
| 2014 மதிப்பீடு | 4,000,000 | 2,000,000 | 23,000,000 |
| நி.ஒ.503(1) – 2014.12.31 அன்றுள்ளவாறான சீராக்குதல்களுக்கு முன்னர் | 2,017,965 | 2,730,296 | 10,572,650 |

**நிறுவனத்தின் செயல்நிறைவேற்றுகை பற்றிய சுருக்கம்**

சட்டவரைஞர் திணைக்களத்தின் பிரதான பணியானது பல்வேறு விடயங்கள் பற்றிய அரசாங்கக் கொள்கைகளை அரசியலமைப்புக்கு ஒத்ததாகவுள்ள சட்டவாக்கங்களாக உருமாற்றம் செய்வதாகும். இந்நடைமுறை, புதிய சட்டவாக்கங்களை வரைதல், ஏலவேயுள்ள சட்டவாக்கங்களைத் திருத்துதல், சட்டவாக்கங்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் இயைபான அமைச்சுக்களினால் ஆற்றுப்படுத்தப்பட்ட துணைநிலைச் சட்டவாக்கங்களை மீளாய்வுசெய்தல் என்பவற்றைக் கொண்டுள்ளது. பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவேண்டிய வரைவுச் சட்டமூலங்களைப் பரிசீலனைசெய்வதற்குக் கூட்டப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக் குழுக்களின் கூட்டங்களில் பங்குபற்றுவதனையும், சட்டமூலங்கள் விவாதத்திற்கு எடுக்கப்படும் போது பாராளுமன்றத்துடன் ஒருங்கிணைவதனையும் உள்ளடக்குகின்ற குறித்த சில வேறு கடமைகளும் இத்திணைக்களத்திற்குப் பொறுப்பாக்கப்பட்டுள்ளன. மேலும், துணைநிலைச் சட்டவாக்கங்களைத் தயாரித்தல் தொடர்பாக அமைச்சுக்களுக்கும், அரசாங்கத் திணைக்களங்களுக்கும் இத்திணைக்களம் சட்ட மதியுரையையும் வழங்குகின்றது.

அரசியலமைப்புக்கு இணங்கியொழுக, இலங்கையின் சட்டவாக்கங்களை அலுவலக முறையாக ஒன்றுதிரட்டுதலையும் மீளாய்வுசெய்தலையும் அவை சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படுதலையும் இலக்காகக் கொண்ட 4 வருடக் கருத்திட்டத்தையும் திணைக்களம் தொடங்கியுள்ளது.

சட்டவரைதற் பிரிவின்கீழ் 2014 ஆம் ஆண்டுக்கு இயைபான சட்டங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

නීති කෙටුම්පත් සම්පාදක දෙපාර්තමේන්තුව
අංක 80, අධිකරණ මාවත
කොළඹ 12.

சட்டவரைஞர் திணைக்களம்
இல.80, அதிகரண மாவத்தை
கொழும்பு 12.

තැ.පෙ. / த.பெ. / P.O.Box 554

LEGAL DRAFTSMAN'S DEPARTMENT,
N0.80, Adhikarana Mawatha,
Colombo 12.

*දුරකථන/தொலைபேசி /Telephones:2333394*

*විදුලි පණිවුඩ* :කෙටුම්පත්, කොළඹ.
*Telegrams* : DRAFTSMAN, Colombo
தந்திகள் :

*ෆැක්ස්/ பெக்ஸ் /Fax:* 2325185, 2435935

*மின்னஞ்சல் :* *E –mail* : Idds1@sltnet.1k

මගේ අංකය / எனது இல / My No. } ශි 12/01/2012 –

ඔබේ අංකය / உமது இல. / Your No. } JP/C/LDD/2/14/08

දිනය / திகத / Date } 29.04.201

கணக்காய்வுக் கண்காணிப்பாளர்,
கணக்காய்வு உப அலுவலகம்,
நீதியமைச்சு,
கொழும்பு 12.

**ஒதுக்கீட்டுக் கணக்கு – 2014**

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் 2014.04.20 ஆந்திகதிய JP/C/LDD/2/14/08 ஆம் இலக்கத்தைக் கொண்ட கடிதத்தில் 02 முதல் 04 வரையிலான விடயங்களின் கீழ் குறிப்பிடப்பட்ட கணக்காய்வுக் கேள்விகள் தொடர்பாகப் பின்வரும் விளக்கத்தை இத்தால் அளிக்கின்றேன்.

**<u>02. நிதி ஏற்பாடுகளின் 50 சதவீதத்துக்கு மேற்பட்டவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை</u>**

| | |
|---|---|
| 15-1-1-2001 | உதவிச் சட்டவரைஞர்களுக்குக் குறித்தொதுக்கப்படவிருந்த அலுவலக அறைகளின் உருவாக்கம் தொடர்பான மதிப்பீடுகளை அங்கீகரிப்பதில் கட்டட நிர்மாணங்கள் திணைக்களத்தின்பால் தாமதமொன்று இருந்ததனால் நிதி ஏற்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்தமுடியவில்லை. |

| | |
|---|---|
| 15-1-1-2502 | சட்டப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைக்கேள்விகள் கோரப்பட்டன, ஆனால் விலைக்கேள்விகள் எவையும் பெறப்படவில்லை. விஜித யாப்பா கம்பெனிக்கு அளிக்கப்பட்ட கோரிக்கை மீதான புத்தகங்கள் எவையும் வழங்கப்படவில்லை. மேலேயுள்ளதன் விளைவாக, குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை முழுமையாகப் பயன்படுத்தமுடியவில்லை. |
| 15-1-1-2502 | சட்டவாக்கங்களை ஒன்றுதிரட்டுவதற்கும் மீளாய்வதற்குமான கருத்திட்டத்தின் பணி 2014 ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டிலேயே தொடங்கியது; ஆதலால் எவையேனும் கொடுப்பனவுகளைச் செய்வதற்குப் போதிய வேலை பூர்த்திசெய்யப்படாமையின் விளைவாகக் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாதிருந்தன. |

## 03. பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கைகளிலான குறைபாடுகள்

நிதி ஒழுங்குவிதி 94இன் நியதிகளின்படி பொறுப்புக்களும் செலவினமும் எச்சூழ்நிலைகளின் கீழும் அந்நிதியாண்டுக்காகக் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகளை விஞ்சாதிருக்க வேண்டிய போதிலும், மூன்று செலவினத் தலைப்புக்களின் கீழ் விட்டுவிடப்பட்ட மீதியைப் பொருட்படுத்தாது 309,569.00 ரூபாத் தொகையினதான பொறுப்பொன்றுள்ளது. இப்பற்றாக்குறைக்கான காரணம் கீழே தரப்பட்டுள்ளது:-

| செலவினத் தலைப்பு | 2014.12.31 அன்றுள்ள வாறான மீதி | 2014.12.31 அன்றுள்ள வாறான பொறுப்பு | மீதியை விஞ்சுகின்ற பொறுப்பு | விளக்கம் |
|---|---|---|---|---|
| 15-1-1-1101 | 7,013 | 28,127 | 21,114 | உதவிப் பணிப்பாளரின் (யூன்/ யூலை/ ஓகத்து மாதங்களின் போதான) பயிற்சிக் காலத்தினுள் உறப்பட்ட போக்குவரத்துச் செலவுகள் காரணமாக, பொறுப்புக்கள், பயன்படுத்தப்படாதுவிடப்பட்ட நிதி ஏற்பாடுகளின் தொகைகளை விஞ்சியுள்ளன. |
| 15-1-1-1402 | 12,114 | 171,823 | 159,709 | 2014 திசெம்பர் மாதத்துக்கான தொலைபேசிச் சிட்டைகள் 2015 சனவரி மாதத்தில் பெறப்பட்டன; |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ஆதலால் சிட்டைகளின் மீது செலுத்தப்பட வேண்டிய தொகைகளை முன்னரே தீர்மானிக்கமுடியாமலிருந்தது; இதன் விளைவாகப் பொறுப்புக்கள் சேமிப்புகளை விஞ்சின (பயன்படுத்தப்படாதுவிடப்பட்ட நிதி ஏற்பாடுகள்) |
| 15-1-1-1403 | 70,875 | 199,621 | 128,746 | 2014 திசெம்பர் மாதத்துக்கான மின்சாரச் சிட்டைகள் 2015 சனவரி மாதத்தில் பெறப்பட்டன; இதன்விளைவாகச் சிட்டைகளின் பெறுமதியை முன்னரே தீர்மானிக்க முடியாமலிருந்தது; இதன் விளைவாகப் பொறுப்புக்கள் சேமிப்புகளை விஞ்சின (பயன்படுத்தப்படாதுவிடப்பட்ட நிதி ஏற்பாடுகள்) |
| மொத்தம் | 90,002 | 399,571 | 309,569 | |

**04. நடப்பிலில்லாத சொத்துக்களின் அசைவு தொடர்பான அறிக்கையிலான குறைவுபாடுகள்**

(1) புத்தகங்கள், மாதவெளியீடுகள், சஞ்சிகைகள் என்பன தொடர்பில் 2014.01.01 அன்றுள்ளவாறான மீதிபற்றிய நிரையின்கீழான ஒதுக்கீட்டுக் கணக்கில், 2014 ஓகத்து 8 ஆந்திகதியன்று நடைபெற்ற ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்பட்ட புத்தகங்களுள் எவைபற்றியும் குறிப்பிடப்படவில்லை.

ஆதலால் ஆகுசெலவுச் சீராக்கம் அவசியமானதல்ல. திணைக்கள அலுவலர்களின் அலுவலகமுறையான கடமைகளில் அவர்களுக்கு உதவுவதற்கு அத்தகைய புத்தகங்கள் அவர்களின் பயன்பாட்டுக்காகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தமையினால், அவை நூல்நிலைய இணக்க இடாப்பில் சேர்க்கப்படவில்லை.

(2) எமது திணைக்களத்துக்குச் சொந்தமான 27,979,940.00 ரூபாப் பெறுமதியான வாகனங்களின் விபரங்கள், வாகன மதிப்பீட்டுச் சபையின் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன (பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது).

ஜீ.எஸ்.ஏ.டி சில்வா ச.ச.
சட்டவரைஞர்

නීති කෙටුම්පත් සම්පාදක දෙපාර්තමේන්තුව
අංක 80, අධිකරණ මාවත
කොළඹ 12.

சட்டவரைஞர் திணைக்களம்
இல.80, அதிகரண மாவத்தை
கொழும்பு 12.

තැ.පෙ. / த.பெ. / P.O.Box 554

LEGAL DRAFTSMAN'S DEPARTMENT,
N0.80, Adhikarana Mawatha,
Colombo 12.

*දුරකථන/தொலைபேசி /Telephones:2333394*

*විදුලි පණිවුඩ* :කෙටුම්පත්, කොළඹ.
*Telegrams* : DRAFTSMAN, Colombo
தந்திகள் :

*ෆැක්ස්/ பெக்ஸ் /Fax:* 2325185, 2435935 *மின்னஞ்சல் :*
*E –mail* : Idds1@sltnet.1k


---

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No. | ශි 12/01/2012 – | ඔබේ අංකය<br>உமது இல.<br>Your No. | JP/C/LDD/2/14/08 | දිනය<br>திகதி<br>Date | 14.07.201 |

கணக்காய்வாளர் தலைமையதிபதி,
கணக்காய்வாளர் தலைமையதிபதித் திணைக்களம்,
பத்தரமுல்ல.

**<u>இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பினது 154 (6) ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி தயாரிக்கப்பட்ட சட்டவரைஞர் திணைக்களம் தொடர்பான 2014 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வறிக்கை – தலைப்பு – 15.</u>**

மேலேயுள்ள அதே குறிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட 2015.07.03 ஆந்திகதிய உங்கள் கடிதம் தொடர்பாக.

தலைப்பு 15- சட்டவரைஞர் திணைக்களம் தொடர்பான கணக்காய்வறிக்கை – 2014 ஆம் ஆண்டு.

மேலேயுள்ள அறிக்கையில் அடங்கியுள்ளவையும் அவற்றுடன் உடன்பட்டுக்கொள்ளமுடியாதுள்ளவையுமான குறித்தசில நிகழ்வுகள் தொடர்பாகப் பின்வரும் விளக்கங்களைக் கொடுக்கமுடியும்.

1:1 புத்தகங்களையும் பதிவேடுகளையும் பேணுதல் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

நிதி ஒழுங்குவிதிகள் 1647 (ஒ) என்பதற்கிணங்க எமது திணைக்களம் வாகனங்கள் பற்றிய இடாப்பொன்றைக் கிரமமாக

வைத்திருந்து பேணுகின்றதுடன் சொல்லப்பட்ட நிரல் கிரமமாக நாளதுவரையாக்கப்படுகின்றது. அதன் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (பின்னிணைப்பு 1).

1:2 ஒதுக்கீட்டுக் கணக்கு.

1:2:1 வரவுசெலவுத்திட்ட ஏற்றஇறக்கங்கள்-

(அ) இயைபான நிறுவனங்களின் ஒருங்கிணைப்புடன் பின்தொடர் நடவடிக்கை காலத்துக்குக்காலம் நிறைவேற்றப்படுகின்றதென்ற நிகழ்வைப் பொருட்படுத்தாது, பின்வரும் செலவினத் தலைப்புக்களில் 57% - 98% என்ற எல்லையினுள் தேறிய நிதி ஏற்பாடுகள் எஞ்சியிருந்தன.

| | |
|---|---|
| 15-1-1-2001 | கட்டட நிர்மாணங்கள் திணைக்களத்தினால் உதவிச் சட்டவரைஞர்களின் பயன்பாட்டுக்கான அலுவலக அறைகளின் உருவாக்கம் தொடர்பான மதிப்பீடுகளை அங்கீகரிப்பதிலான தாமதம் காரணமாக நிதி ஏற்பாடுகள் செலவிடப்படாதிருந்தன. |
| 15-1-1-2502 | சட்டப் புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக விலைக்கேள்விகள் கோரப்பட்டன. எவ்வாறாயினும் விலைக்கேள்விகள் எவையும் பெறப்படவில்லையென்பதுடன் விஜித யாப்பா கம்பெனியினால், அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட கோரிக்கைகள் தொடர்பில் புத்தகங்கள் எவையும் வழங்கப்படவில்லை. |
| 15-1-1-2502 | ‘‘சட்டவாக்கங்களைத் திரட்டுவதற்கும் மீளாய்வதற்குமான கருத்திட்டம்’’ 2014 ஆம் ஆண்டின் கடைசிக் காலாண்டிலேயே தொடங்கியதனால், கொடுப்பனவுகள் செய்யப்படுவதனைத் தேவைப்படுத்துகின்ற வகையில் போதிய வேலை செய்யப்பட்டிருக்கவில்லை; ஆதலால் குறித்தொதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் செலவிடப்படாதிருந்தன. |

(ஆ) செலவினத் தலைப்பு 2502 – திணைக்கள நூல்நிலையத்துக்கான புத்தகங்கள், மாத வெளியீடுகள், சஞ்சிகைகள் என்பனவற்றின் கொள்வனவு மட்டுமே முதலீடுகளாகக் காட்டப்படுகின்றது.
திணைக்கள அலுவலர்களினால் தமது அலுவலகமுறையான கடமைகள் நிறைவேற்றப்படுகையில் பயன்படுத்தப்படுவதற்குக் கொள்வனவு செய்யப்பட்ட புத்தகங்கள் (அகராதிகள், பாராளுமன்றச் சட்டங்களின் சுட்டி) இந்த இடாப்பில் சேர்க்கப்படவில்லை.

2,815/- ரூபாப் பெறுமதியானவையும் திணைக்கள அலுவலர்களினால் தமது கடமைகள் நிறைவேற்றப்படுகையில் பயன்படுத்தப்படுவதற்குக் கொள்வனவு செய்யப்பட்டவையும் 2013ஆம் ஆண்டில் ஆய்வுச் சபையினால் விற்பனை செய்யப்படுவதற்கு விதந்துரைக்கப்பட்டவையுமான புத்தகங்கள், அகராதிகளையும் பாராளுமன்றச் சட்டங்களின் சுட்டிகளையும் அடக்கின.

மேலேயுள்ள நிகழ்வு காரணமாக, 6112210 ஆம் கோவையிலக்கத்தின்கீழ், 2014ஆம் ஆண்டுக்கான நடப்பிலில்லாத சொத்துக்களின் அசைவில், 'புத்தகங்கள், மாதவெளியீடுகள், மற்றும் சஞ்சிகைகள்' என்பதன்கீழ் சொல்லப்பட்ட பொருட்களின் பெறுமதி காட்டப்படவில்லையாதலால் அதன் ஆகுசெலவிலிருந்தும் செலவினத்திலிருந்தும் அதனைத் தவிர்ப்பதற்கு நடபடிகள் எவையும் எடுக்கப்படவில்லை.

1:3 நல்லாட்சியும் வகைசொல்லவேண்டியமையும்.

1:3:1 உள்ளகக் கணக்காய்வு.

2011ஆம் ஆண்டு சனவரி மாதம் 24ஆந்திகதியன்று சனாதிபதிச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது. (சொல்லப்பட்ட கடிதத்தின் பிரதியொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது – பின்னிணைப்பு ii).

2014ஆம் ஆண்டு சனவரி மாதம் 24ஆந்திகதிய கடிதத்தின் மூலம் சனாதிபதிச் செயலாளருக்கு மேலும் அறிவிக்கப்பட்டது. (பின்னிணைப்பு iii).

2014ஆம் ஆண்டின் போதிலுங்கூட திணைக்களத்தில் ஏதேனும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்படவில்லையென்பதுடன் இத்திணைக்களம் தொடர்பான உள்ளகக் கணக்காய்வு, சனாதிபதி அலுவலகத்தின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் நிறைவேற்றப்பட்டுமிருந்தது.

ஜீ.எஸ்.ஏ.டி சில்வா ச.ச.
சட்டவரைஞர்

பிரதி : செயலாளர், நீதியமைச்சு

**திணைக்களத்தின் வேலைச் செயல்நிறைவேற்றுகையை மேம்படுத்துவதற்கு மிக்க அண்மையில் எடுக்கப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வழிமுறைகள்**

(i) திணைக்களத்திலுள்ள எல்லாச் சட்ட அலுவலர்களுக்கும் பொறுப்பிக்கப்பட்ட வேலையை (இவ்வேலை, பாராளுமன்றச் சட்டங்களைத் தயாரித்தல் தொடர்பான சட்டமூலங்களையும் அத்தகைய சட்டங்களுக்கு உத்தேசிக்கப்பட்ட திருத்தங்களையும் வரைதல், மற்றும் தனிப்பட்ட உறுப்பினர் சட்டமூலங்களை மீளாய்வு செய்தல் மற்றும் வேறு இணைந்த வேலைகள் என்பவற்றைக் கொண்டுள்ளது) கிரமமான அடிப்படையில் பின்தொடரும்படியும் அத்தகைய வேலையை மும்மொழிகளிலும் பூர்த்தி செய்யும்படியும் அவர்களுக்குத் தொடர்ச்சியாக அறிவுறுத்துதல்கள் விடுக்கப்பட்டுள்ளன.

(ii) அனுபவம் பெற்ற சிரேட்ட சட்டவரைஞர்களின் பற்றாக்குறையை நிவர்த்திசெய்யும் வகையில், சட்டவாக்கங்களை வரைவதில் உதவிபெறுவதற்கென நான்கு ஆலோசகர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர்.

(iii) சட்டமூலங்களையும் திருத்தச் சட்டங்களையும் வரைதல் தொடர்பான மொழிபெயர்ப்புப் வேலையைக் கையாள்வதற்குத் தகைமைபெற்ற மொழிபெயர்ப்பாளர்களின் பற்றாக்குறையொன்றுள்ளது. தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள் இல்லாமையினால் (சட்டவாக்க வரைதல் தொடர்பான மொழிபெயர்ப்புப் வேலையில் பரிச்சயமுள்ள) அரச கரும மொழித் திணைக்களத்தின் தொழிலிலுள்ள அலுவலர்களின் சேவைகளை ஈடுபடுத்துவது அவசியமாக வந்துள்ளது.

(iv) சட்டவாக்கங்களை வரைவதற்கான நடைமுறையில் உதவுகின்ற ஆவணப் படுத்துகை மற்றும் பதிப்புத் தொடர்பான பதவிகளிலுள்ள வெற்றிடங்களுள் சிலவற்றையேனும் நிரப்புவதற்குப் பதின்மூன்று வெளியீட்டு உதவியாளர்களும் பதிப்பாசிரியர்களும் ஆட்சேர்க்கப்பட்டனர்.

(v) எல்லாச் சட்ட அலுவலர்களினதும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களினதும் அறிவையும், மனநிலையையும், தேர்ச்சிகளையும் சீராக்குவதனை இலக்காகக்கொண்ட பல்வேறு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களில் பங்குபற்றுவதற்கு அத்தகைய எல்லா அலுவலர்களுக்கும் போதிய வாய்ப்புக்கள் அளிக்கப்படுகின்றன.

(vi) இத்திணைக்களத்தில் தாபிக்கப்பட்ட A தர நூலகம், சட்டம் என்ற விடயத்தின் மீது எழுதப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கு அவசியமான வசதிகளைத் திணைக்கள அலுவலர்களுக்கு வழங்குகின்றது.

(vii) திணைக்களத்தின் எல்லாச் சட்ட அலுவலர்களும் ஏனைய பணியாட்டொகுதி உறுப்பினர்களும், அரசாங்க சேவையின் மதிப்பைப் பேணிக்காக்கும் வகையில் வேலை நேரங்களின் போது தமது அலுவலக முறையான கடமைகளைக் கவனிக்க வேண்டுமென்ற பயன்பட்டனவான தெளிவான அறிவுறுத்துதல்கள் அவர்களுக்கு விடுக்கப்பட்டுள்ளதுடன் சட்ட அலுவலர்களுட்பட்ட பணியாட்டொகுதி உறுப்பினர்கள் எல்லோரும் தமது கடமைகளை எடுத்துக்காட்டான முறையில் நிறைவேற்றுகின்றனரென்பதைக் குறிப்பிடவும் வேண்டும்.

(viii) சட்டவாக்கங்களை வரைவதில் எளிமையான மொழிநடையைப் பயன்படுத்துவது புதிய உலகளாவிய போக்காகவிருப்பதனால், சட்ட அலுவலர்களுக்கிடையே எளிமையான மொழிநடையை மேம்படுத்தும் நோக்குடன் “ சட்டவாக்கங்களை வரைவதற்கான எளிமையான மொழிநடை” எனத் தலையங்கமிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டமொன்று ஏலவே தொடங்கப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கு ஐநாஅ நிகழ்ச்சித்திட்டத்தினால் (UNDP) ஆதரவளிக்கப்படுவதுடன் சிரேட்ட மற்றும் உதவிச் சட்டவரைஞர்கள் இந்நிகழ்ச்சித்திட்டத்தை ஊக்கத்துடன் பின்பற்றிவருகின்றனர்.

(ix) சட்டவாக்கங்களை வரைதல் தொடர்பான முக்கிய துறைகளில், தொடர்புபட்ட சட்டவாக்கங்களை வரையும்போது சட்ட அலுவலர்கள் கடைப்பிடிப்பதற்காக, மாதிரிச் சட்டங்களின் விசேட தொகுதி தயாரிக்கப்படுகின்றது. மாதிரிச் சட்டங்கள் கிடைக்கக்கூடியதாகவிருத்தல், சட்டவரைஞரின் வேலையை இலகுவாக்குவதுடன் திணைக்களத்தினால் வகுத்தமைக்கப்பட்ட வரைவுகளின் ஒருசீரானதன்மையையும் உறுதிப்படுத்துகின்றது.